**இராசிபுரம் நகராட்சி தனி அலுவலர் அவர்களால் 29.01.2021—ஆம் தேதி முற்பகல் 11.00 மணிக்கு அவசரக் கூட்டத்தில் நடைபெற உள்ள கூட்ட நடவடிக்கைகள்.**

இராசிபுரம் நகராட்சி, தனி அலுவலர்,
நாள் : 28.01.2021 இராசிபுரம் நகராட்சி

<u>பொருள்கள்</u>

(1) இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவிற்கு தேவைப்படும் முககவசம், ஆசிட், பினாயில் மற்றும் நீர்த்த சுண்ணாம்புத்தூள் ஆகியவை விநியோகம் செய்யும் பணிக்கு கடந்த 22.01.2021 அன்று இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. அவற்றின் விவரம் பின்வருமாறு.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | முக கவசம் ஒன்றின் விலை | ஆசிட் ஒரு லிட்டர் விலை | பினாயில் ஒரு லிட்டர் விலை | நீர்த்த சுண்ணாம்புத் தூள் ஒரு கிலோ விலை |
|---|---|---|---|---|---|
| 1 | ஸ்ரீ காளியம்மன் டிரேடிங் கார்ப்பரேஷன், நாமக்கல் | ரூ. 12/— | 58/— | 70/— | 14/— |
| 2 | ஸ்ரீ அத்தனூர் அம்மன் டிரேடர்ஸ், காளப்பநாயக்கன்பட்டி | 13.50 | 60/— | 72/— | 76/— |

வ.எண். 1—இல் குறிப்பிட்டுள்ள நிறுவனத்தினர் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளதால், ஸ்ரீ காளியம்மன் டிரேடிங் கார்ப்பரேஷன், நாமக்கல் என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அ) மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) மேற்காணும் செலவினங்களை திடக்கழிவு மேலாண்மை நிதியிலிருந்து (SUC) மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(153/21/எச்1)**

**தீர்மானம் எண். 953**

அனுமதிக்கப்பட்டது.

(2) இராசிபுரம் நகராட்சிப் பகுதிகளில் அடிப்படை வசதிகள் திட்டத்தின்கீழ் பணிகள் மேற்கொள்ள கீழ்காணும் பணிகள் அரசாணை (நிலை) எண். 368 நிதி (மாநிகு) துறை நாள் 07.10.2020—இன்படி எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

| | | | |
|---|---|---|---|
| 1) | குடிநீர் பணிகள் | வார்டு எண். 8 இராமசாமி தோட்டம், மாரப்பன் தோட்டம், வீட்டு வசதி வாரியம், காமராஜ் நகர் பகுதிக்கு குடிநீர் பிரதான குழாயமைத்தல்<br>வார்டு எண். 20 காந்தி நகரில் ஆழ்துளைக் கிணறு அமைத்து தண்ணீர் வசதி செய்தல்<br>வார்டு எண். 25 காளியம்மன் கோவில் ஆழ்துளைக் கிணறு அமைத்து தண்ணீர் வசதி செய்தல் | ரூ. 20.00 இலட்சம். |
| 2) | சிறுபாலம் | கோரைக்காடு சாலையில் சிறு பாலம் அமைத்தல்<br>கோனேரிப்பட்டி மேட்டுக்காடு சாலையில் சிறு பாலம் அமைத்தல் | ரூ. 15.00 இலட்சம். |

| | | | |
|---|---|---|---|
| 3) | தெரு விளக்கு | இராசிபுரம் நகராட்சியில் 200 எண்ணிக்கை தெருவிளக்குகள் அமைத்தல் | ரூ. 20.00 இலட்சம். |
| | | **மொத்தம் :-** | **ரூ. 55.00 இலட்சம்.** |

ரூ. 55.00 இலட்சம் அடிப்படை வசதிகள் திட்டத்தின்கீழ் மான்யமாக கோரி முன்மொழிவு அனுப்பவும், திட்ட மதிப்பீடுகளுக்கு நிர்வாக அனுமதி வழங்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(இ1/539/21)

**தீர்மானம் எண். 954**

அனுமதிக்கப்பட்டது.

( 3 ) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறையின் அரசாணை (நிலை) எண். 166 நாள் 23.11.2016–இன்படி, இராசிபுரம் நகராட்சிப் பகுதிகளிலுள்ள நகராட்சி மற்றும் அரசு மேல்நிலைப் பள்ளிகள் மொத்தம் 9 பள்ளிகள் உள்ளது. அப்பள்ளிகளில் உள்ள கழிவறைகள், பள்ளி வளாகம், வகுப்பறைகள் மற்றும் உணவு சாப்பிடும் இடங்களை ஒப்பந்தப் பணியாளர்கள் மூலம் சுத்தம் செய்யுமாறு மேற்கண்ட அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி ஒரு பள்ளிக்கு 2 நபர் வீதம் மொத்தம் 9 பள்ளிகளுக்கு 18 ஒப்பந்தப் பணியாளர்களைக் கொண்டு ஒரு வருடத்திற்கு வெளிக்கொணர்வு மூலம் நியமனம் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ. 32/– இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) அரசாணை எண். 166–இன்படி மேற்கண்ட செலவினங்களை நகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3) ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பை தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்ய ஆகும் செலவினங்களையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(565/21/எச்1)

**தீர்மானம் எண். 955**

அனுமதிக்கப்பட்டது.

( 4 ) இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் ஆட்டோ (LCV) வாகனம் TN 28 BW 9642–ற்கு தகுதிச்சான்று மற்றும் வாகன பழுதுகள் நீக்கி சரி செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ. 1.30 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அ) மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) மேற்காணும் செலவினங்களை நகராட்சி வருவாய் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(149/21/எச்1)

**தீர்மானம் எண். 956**

அனுமதிக்கப்பட்டது.

(5) இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் டிப்பர் லாரி பதிவு எண். TN 28 AT 0110–ற்கு தகுதிச்சான்று மற்றும் இதர பழுதுகளை சரி செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ. 1.30 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அ) மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) மேற்காணும் செலவினங்களை நகராட்சி வருவாய் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(152/21/எச்1)**

**தீர்மானம் எண். 957**

அனுமதிக்கப்பட்டது.

(6) இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் ஆட்டோ (LCV) வாகனம் TN 28 BW 9298–ற்கு தகுதிச்சான்று மற்றும் வாகன பழுதுகள் நீக்கி சரி செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ. 1.30 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அ) மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) மேற்காணும் செலவினங்களை நகராட்சி வருவாய் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(510/21/எச்1)**

**தீர்மானம் எண். 958**

அனுமதிக்கப்பட்டது.

(7) இராசிபுரம் நகராட்சி தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் மத்திய அரசின் Ministry of Housing and Urban Affairs துறையினர் குப்பையில்லா நகரங்களுக்கான நட்சத்திர அங்கீகாரம் வழங்கி வருகின்றனர். மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி, இராசிபுரம் நகராட்சிப் பகுதியில் குப்பைத் தொட்டிகள் (Dumber bin) அனைத்தும் அகற்றப்பட்டு 100 சதவீதம் வீடுகளில் நேரிடையாக (Door to Door collection) குப்பைகளை தரம் பிரித்து வாங்கப்படுகின்றன. இராசிபுரம் நகராட்சியை குப்பையில்லா நகரமாக மூன்று நட்சத்திரங்கள் (Three stars) பெற சுய உறுதிமொழி (Self Declaration) சான்றிதழ் பெறவும், மேலும், பொது மக்கள் தங்களின் ஆட்சேபனைகள் மற்றும் கருத்துகளை நகராட்சி அலுவலகத்தில் தெரிவிக்க 2 தினசரி நாளிதழில் விளம்பரம் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ. 15000/–ற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** **1)** மன்றம் அனுமதிக்கலாம்.
**2)** மேற்காணும் செலவினங்களை நகராட்சி திடக்கழிவு மேலாண்மை நிதியிலிருந்து (SUC) மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(1503/17/எச்1)**

**தீர்மானம் எண். 959**

அனுமதிக்கப்பட்டது.

(8) மாண்புமிகு சமூக நலம் மற்றும் சத்துணவு அமைச்சர் அவர்கள் இராசிபுரம் நகராட்சிப் பகுதிகளில் மூன்று இடங்களில் மக்கள் குறை தீர்க்கும் முகாம் நடத்துமாறு அறிவுரை வழங்கியுள்ளதால், நகராட்சிப் பகுதிகளில் முகாம் நடத்த தேவையான சாமியானா பந்தல், மேட், சைடு துணி, டேபிள், சேர், ஸ்பீக்கர் பாக்ஸ், மைக் மற்றும் பேனர்கள் அமைக்க

வேண்டியிருப்பதால் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ. 50000/—ற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்காணும் செலவினங்களை நகராட்சி வருவாய் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(1018/21/எச்1)**

**தீர்மானம் எண். 960**

அனுமதிக்கப்பட்டது.

( 9 ) இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் ஆட்டோ (LCV) வாகனம் TN 28 BW 9243—க்கு தகுதிச்சான்று மற்றும் வாகன பழுதுகள் நீக்கி சரிசெய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ. 1.30 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்காணும் செலவினங்களை நகராட்சி வருவாய் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(151/21/எச்1)**

**தீர்மானம் எண். 961**

அனுமதிக்கப்பட்டது.

( 10 ) இராசிபுரம் நகராட்சிப் பகுதியில் இயங்கி வரும் ஆடு வதை கூடம் (Slaughter House) 2021—ஆம் ஆண்டிற்கான உரிமையாணைக் கட்டணம் ரூ. 2000/— உணவு பாதுகாப்புத் துறைக்கு செலுத்த வேண்டியிருப்பதால், ரூ. 2000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்காணும் செலவினங்களை நகராட்சி வருவாய் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(1247/21/எச்1)**

**தீர்மானம் எண். 962**

அனுமதிக்கப்பட்டது.

( 11 ) இந்நகராட்சியின் அனைத்துப் பிரிவுகளுக்கும் தேவையான பதிவேடுகள், படிவங்கள் மற்றும் எழுதுபொருட்கள் வாங்க ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ. 500000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. செலவுத் தொகை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(பி3/ 101/21)

**தீர்மானம் எண். 963**

அனுமதிக்கப்பட்டது.

( 12 ) இராசிபுரம் நகராட்சியின் அலுவலக பயன்பாட்டிலுள்ள அனைத்துப் பிரிவு பிரிண்டர்களின் டோனர் மற்றும் ரிப்பன் கேட்ரேஜ்கள் அலுவலக இருப்பில் குறைவாகவும்

இருப்பு இல்லாமலும் இருப்பதால் மேற்படி டோனர்கள் மற்றும் ரிப்பன்கள் வாங்க ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ. 40000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(பி3/237/21)

**தீர்மானம் எண். 964**

அனுமதிக்கப்பட்டது.

( 13 ) வருகின்ற சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு இராசிபுரம் நகரின் முக்கியப் பகுதிகள், மெயின் ரோடு மற்றும் அனைத்து பள்ளிகள் ஆகிய பகுதிகளை சுகாதாரமாக பராமரிக்க வேண்டியிருப்பதாலும், சுவர் விளம்பரங்களை அழிக்க வேண்டியிருப்பதாலும், நீர்த்த சுண்ணாம்புத் தூள், பிளிச்சிங் பவுடர், ஜனதா செம்பவுடர், கலர் பவுடர் ஆகியவைகளை வாங்கி வழங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ. 2.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்காணும் செலவினங்களை நகராட்சி வருவாய் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(1248/21/எச்1)

**தீர்மானம் எண். 965**

அனுமதிக்கப்பட்டது.

( 14 ) இராசிபுரம் நகராட்சியில் இணையதளத்தில் தயார் செய்யப்பட்ட 2019—2020—ஆம் ஆண்டிற்கான பொது நிதி, குடிநீர் நிதி மற்றும் கல்விநிதி கணக்குகளை தயார் செய்து தணிக்கைக்கு சமர்ப்பித்து, தணிக்கை முடிக்கப்பட்டுள்ளதால், ஆண்டு கணக்குகள் தயார் செய்து வழங்கியதற்கான தொகை `. 50000/— அக்கவுண்ட்ஸ் கன்சல்டென்ட் திரு ஜெ. கிருஷ்ணமூர்த்தி என்பவருக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 2019—2020—ஆம் ஆண்டிற்கான ஆண்டுக் கணக்குகள் தயார் செய்ததற்கான தொகை வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(பி1/903/20)

**தீர்மானம் எண். 966**

அனுமதிக்கப்பட்டது.

( 15 ) பார்வை : நகர் மன்றத் தீர்மானம் எண். 727 நாள் 31.01.2020.

இராசிபுரம் நகராட்சிக்குச் சொந்தமான பேருந்து நிலையத்திற்கு நாள்தோறும் வந்து செல்லும் பேருந்துகளுக்கு நுழைவுக் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் குத்தகை ஏலத்தில் எவரும் கலந்து கொள்ளாததால் துறை மூலமாக நுழைவுக் கட்டணம் வசூல் செய்ய ரூ. 12/— மதிப்பிலான ரசீதுகள் அச்சடிக்க வேண்டியுள்ளது. ஒரு நாளைக்கு 210 பேருந்துகளுக்கு வசூல் செய்ய இருப்பதால் 210x30x10 - 100000 எண்ணிக்கை ரசீதுகள் அச்சிட்டு பெறவும் அதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ. 25000/—க்கு நகர் மன்றம் அனுமதி வழங்கியுள்ளது. மேற்படி ரசீதுகள் அச்சிட்டு பெறுவதற்கு கூடுதல் செலவினமாக இருப்பதால் அதற்கான கூடுதல் செலவினத் தொகை ரூ. 64680/—க்கு மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(2709/17/அ2)

**தீர்மானம் எண். 967**

அனுமதிக்கப்பட்டது.

( 16 ) இராசிபுரம் நகராட்சி பாரதிதாசன் சாலை நகராட்சி நடுநிலைப் பள்ளியிலுள்ள பழுதடைந்த ஓட்டு கட்டடத்தை இடித்துவிட்டு புதிய வகுப்பறைகள் கட்ட ரூ. 40.00 இலட்சம் மதிப்பீடு மண்டல செயற் பொறியாளர் அவர்களது தொழில்நுட்ப அனுமதிக்காக அனுப்பப்பட்டுள்ளது.

புதிய கட்டடம் கட்டுவதற்கு ஏதுவாக, பழுதடைந்துள்ள பழைய ஓட்டு கட்டடத்தினை இடித்து அப்புறப்படுத்த ஆகும் மதிப்பீடு ரூ. 40000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. செலவினத்தை நகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்க்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அ) பழுதடைந்த ஓட்டு கட்டடத்தினை இடித்து அப்புறப்படுத்தும் ரூ. 40000/— மதிப்பீட்டிற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.
ஆ) பணிக்கான செலவினத்தை நகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்க்கொள்ளவும் மன்ற அனுமதிக்கலாம்.

(1749/19/இ1)

**தீர்மானம் எண். 968**

அனுமதிக்கப்பட்டது.

ஒம் /— சு. பிரபாகரன்,
தனி அலுவலர்.

/ உண்மை நகல் /

ஆணையாளர்,
இராசிபுரம் நகராட்சி.